செ.வெ.எண்: 353/2016 நாள்: 13.06.2016

**பத்திரிக்கை செய்திக்குறிப்பு (மாதிரி)**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தென்னை பயிரிடும் விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு 2016ம் ஆண்டில் விலை ஆதரவு திட்டத்தின் கீழ் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் உள்ள தோவாளை அகஸ்தீஸ்வரம் தாலுகா வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அரவை கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.59.50/- க்கும் பந்து கொப்பரை ரூ.62.40/- க்கும் கொள்முதல் செய்யப்படவுள்ளது. இந்த திட்டம் 15.06.2016 முதல் 180 நாட்களுக்கு செயல்படுத்தப்படும்.

தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கொப்பரையை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தின் தேரூர் மற்றும் திங்கள் நகர் கிட்டங்கிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லும் போது கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வேளாண் அலுவலர் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட தங்களது முகவரி, சர்வே எண், நிலப்பரப்பு, தென்னை பயிரிட்டுள்ள அளவு குறித்து அடையாளச் சான்றிதழ், தங்களது பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் சான்றிதழ் நகல்களுடனும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கணக்கு இருப்பின் அந்த வங்கி பாஸ்புத்தகத்தின் முதல் பக்க நகலுடனும் கண்டிப்பாக கொண்டு செல்ல வெண்டும். சம்பந்தப்பட்ட விவசாயி கொப்பரையை கொண்டு செல்ல இயலாவிடில் அவரது குடும்ப அட்டையிலுள்ள வயதுவந்த நபர் கொப்பரையை கொண்டு செல்லலாம். விவசாயிடமிருந்து ஒரு நாளில் அவரது ஆண்டு உற்பத்தியில் 1/4 பங்கு அல்லது 2500 கி.கி. இதில் குறைவான அளவு மட்டுமே கொள்முதல் செய்யப்படும். ஒரு கொள்முதலுக்கும் அடுத்த கொள்முதலுக்கும் இடையில் குறைந்த பட்சம் 45 நாட்கள் இருக்கவேண்டும்.

கொப்பரைக்கான தொகை விவசாயிக்கு மின்னணு கணக்கு பரிமாற்றம் மூலம்/ கோடிட்ட காசோலை மூலம் மூன்று நாட்களுக்குள் பட்டுவாடா செய்யப்படும். மேற்கண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திட்டத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தென்னை பயிரிட்டுள்ள விவசாயிகளை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் சவான், இஆப அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்.
கன்னியாகுமரி

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**